(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 136.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 மார்ச் 05, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1185/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம் எனும் தேசிய பாடசாலையொன்று உள்ளது என்பதையும்;

(ii) அந்தப் பாடசாலையில் தற்போது ஆசிரியர் வெற்றிடங்கள், ஊழியர் வெற்றிடங்கள், தளபாடப் பற்றாக்குறை மற்றும் வளப் பற்றாக்குறை நிலவுவதோடு, இதன் காரணமாக அந்தப் பாடசாலை கல்வி நடவடிக்கைகளில் சற்று பின்னடைவைச் சந்தித்துள்ளது என்பதையும்;

(iii) அந்த வெற்றிடங்கள்/பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யாமல் அந்தப் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த முடியாது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் உள்ள கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலையில் 17 கனிஷ்ட ஊழியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டபோதிலும், இதுவரை அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பாடசாலையின் கட்டிடத் தேவைகள் பூர்த்திசெய்யப்படும் திகதி யாது என்பதையும்;

(iv) அந்தப் பாடசாலையின் தளபாடப் பற்றாக்குறைக்கு தீர்வு வழங்கப்படும் திகதி யாது என்பதையும்;

(v) மேற்படி பாடசாலையின் பணியாட்டொகுதியில் நிலவும் வெற்றிடங்கள் முழுமையாக நிரப்பப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1453/2025

கௌரவ கே. காதர் மஸ்தான்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 136 கிராம அலுவலர் பிரிவுகளில், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் பயன்படுத்தக்கூடிய பல்தேவை சேவை அலுவலகங்கள் (சேவாபியஸ) இல்லாத கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளனவா;

(ii) ஆமெனில், தற்காலிகமாக மாற்று இடங்களில் இயங்கிவரும் அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(iii) புனரமைக்கப்பட வேண்டிய அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(iv) மலசலகூடங்கள், நீர் மற்றும் மின்சார வசதிகள் இல்லாத அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

(v) மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள அலுவலகங்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) (i) மேற்படி குறைபாடுகள் காரணமாக பொது மக்களுக்குத் தரமான சேவையை வழங்குவதில் அசௌகரியங்கள் காணப்படுவதை அவர் அறிவாரா;

(ii) தரமான மற்றும் துரிதமான சேவையை வழங்கும் பொருட்டு மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குள்ள திட்டம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1501/2025

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் பிரதான சிறு ஏற்றுமதிப் பயிர்கள் யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போதுவரை மேற்படி சிறு ஏற்றுமதிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் ஈட்டிய வருமானம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) சிறு ஏற்றுமதி உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியை மேலும் மேம்படுத்து வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1543/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கேகாலை மாவட்டத்தில் யட்டியாந்தோட்டையிலிருந்து சீபோத், நாகஸ்தென்ன ஊடாக நாவலபிட்டி வரை செல்லும் வீதி சுமார் 20 வருடங்களாக புனரமைக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) கொழும்பிலிருந்து நாவலபிட்டி வரையான மாற்று வீதியாக மேற்படி வீதியைப் பயன்படுத்தலாம் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி வீதியின் 9ஆவது கிலோ மீட்டரிலிருந்து அபிவிருத்தி செய்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திட்டமிடப்பட்டிருந்ததா என்பதையும்;

(iv) அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(v) அந்த அபிவிருத்தி பணிகள் முறையாக இடம்பெற்றுள்ளனவா என்பதையும்;

(vi) அதன்போது முறையான பெறுகை வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) மேற்படி வீதியின் அபிவிருத்தி பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1550/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் அதிகளவானோர் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளதுடன் அவர்களது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகள் போதியளவில் காணப்படாமை பற்றி அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அம்மாவட்டத்தில் பொத்துவில் உட்பட ஏனைய பிரதேசச் செயலாளர் பிரிவுகளில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளை ஏற்பாடு செய்து தருவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான தடைகள் யாவை என்பதையும்;

(iv) பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் நவீனரக பால் சேகரிப்பு நிலையமொன்றை அமைப்பதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரித்து, கால்நடை வளர்ப்பாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதன் ஊடாக நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1677/2025

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடமையின் போது உயிரிழந்த முப்படை அங்கத்தவர்களின் விதவைகள்/ தங்கி வாழ்வோருக்கு வழங்கப்பட்டு வந்த விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் அல்லது கொடுப்பனவுகள் செலுத்தும் நடவடிக்கைகள் தாமதமாகின்றமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி தாமதங்களை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அங்கவீன நிலைமை காரணமாக சேவையிலிருந்து விலகிய பின்னர் திருமணம் முடித்த இராணுவப்படை அங்கத்தவர்கள் உயிரிழந்த பின்னர் அவர்களின் விதவைகள்/தங்கி வாழ்வோருக்கு செலுத்தப்படும் ஊதியங்கள் அல்லது கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஊதியங்கள் அல்லது கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2009.05.19 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இராணுவப் படை அங்கத்தவர்களில் 85% ஓய்வூதிய உரித்தை கொண்டிராதவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஓய்வூதிய உரித்து செலுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு 85% ஓய்வூதிய உரித்து வழங்கப்பட வேண்டியது பொருத்தமானதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அவர்களுக்கு மேற்படி ஓய்வூதிய உரித்தை செலுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

1786/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி. சூரியபண்டார,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு வாகன வகையின் அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) வாகனப் புகை வெளியேற்றப் பரிசோதனைகளை நடத்தும் நிறுவனங்களிடமிருந்து அரசாங்கத்திற்கு வருடாந்தம் கிடைக்கப் பெறும் வருமானம் ஒவ்வொரு நிறுவனத்தின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) வாகனப் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக வகுத்துள்ள எதிர்காலத் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1810/2026

கௌரவ லசித் பாஷண கமகே,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹ சணச வங்கியில் நிதியை வைப்பிலிட்டவர்கள் தொடர்பான பிரச்சினையொன்று நிலவுவதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி வங்கியில் நிதியை வைப்பிலிட்டு அநீதிக்குள்ளாகியுள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வைப்பாளர்களால் வைப்பிலிடப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி வைப்பாளர்களுக்காக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) அந்நடவடிக்கைகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1830/2026

கௌரவ இம்ரான் மகரூப்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் தெல்தோட்டை பிரதேச செயலகப் பிரிவிலும் அதை அண்டிய கிராமங்களிலும் வசிக்கும் மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை மற்றும் அவசர சுகாதார பிரச்சினைகள் தொடர்பாக அறிவாரா என்பதையும்;

(ii) தெல்தோட்டை அநுர டேனியல் மாவட்ட வைத்தியசாலை, கலஹா மற்றும் பட்டியகம-பல்லேகம பிரதேச வைத்தியசாலைகளின் தற்போதைய தரவரிசைப்படுத்தல் யாதென்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலைகளின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தற்போதுள்ள பணியாட்டொகுதி யாதென்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைகளில் அவசர விபத்துப் பிரிவு, சத்திரசிகிச்சைக் கூடம், அதி தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் மகப்பேறியல் மற்றும் பெண் நோயியல் விசேட நிபுணத்துவச் சேவைகள் காணப்படாத காரணத்தினால் நோயாளர்கள் கண்டி மற்றும் பேராதனை வைத்தியசாலைகளுக்கு மாற்றப்படும் போது நோயாளர்கள் வழியிலேயே உயிரிழக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(v) தெல்தோட்டை அநுர டேனியல் மாவட்ட வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கும், கலஹா மற்றும் பட்டியகம - பல்லேகம வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ‘தித்வா புயல்’ காரணமாக இப் பிரதேசங்களின் வீதிகள் சேதமடைந்துள்ள நிலையில், அவசரத் தேவைகளின் போது துரிதமாக செயற்படும் வகையில் மேற்படி வைத்தியசாலைகளுக்கு மேலதிக நோயாளர் காவு வண்டிகளை வழங்குவதற்கும்;

(ii) கலஹா மற்றும் தெல்தோட்டை பிரதேச மக்களின் சுகாதார உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு விசேட ஊழியர்படையொன்றை நியமித்து தீர்வு காண்பதற்கும்;

நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

1831/2026

கௌரவ கந்தசாமி பிரபு,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 2025/2026 ஆண்டிற்கென முன்மொழியப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் வலயத்தின் தற்போதைய நிலைமை யாது;

(ii) கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மட்டக்களப்பு கிளையினூடாக இவ்வருடத்தில் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றுள்ள உள்ளூர் தொழில்முயற்சியாளர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தறித் தொழில்களுக்கான சந்தை வாய்ப்புக்களை இலகுபடுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்காக வழங்கப்பட்டுள்ள குறைந்த வட்டி வீதத்திலான கடன்களின் மொத்தப் பெறுமதி யாது;

(v) கிழக்கு மாகாணத்தில் விவசாய உற்பத்தி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கு விசேட வரிச் சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(vi) மட்டக்களப்பு மாவட்டத்தில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள தொழில்முயற்சியாளர்களுக்கான ‘SME பிணை நிதியத்தின்’ தற்போதைய முன்னேற்றம் யாது;

(vii) மேற்படி மாவட்டத்தில் பிராந்திய பொதியிடல் மத்திய நிலையமொன்றை அமைப்பதற்கான திட்டம் ஏதேனும் உள்ளதா;

(viii) இறக்குமதி மாற்றீடுகளிலிருந்து உள்ளூர், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.
மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.
(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.
இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.
(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.
வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.
(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.
தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*5.
பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— “2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக.” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

6.
மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] ‘‘சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக’’ எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1851/2026

கௌரவ அஜித்.பி.பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 1989.11.13 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகர் திரு.ரோஹண விஜேவீரவின் மறைவின் பின்னர், அவரின் மனைவி மற்றும் பிள்ளைகளை பாதுகாப்பதற்காக அரசாங்கம் அவர்களை பராமரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறு அரசாங்கத்தின் பராமரிப்பின் கீழ் இருந்த ஆட்களுக்கும், திரு. ரோஹண விஜேவீரவுக்கும் இடையிலான உறவு முறை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆட்களை தடுத்து வைத்திருந்த இடங்கள் யாவையென்பதையும்;

(iv) தற்போது அரச பாதுகாப்பு மற்றும் பராமரிப்பினைப் பெறுகின்ற திரு. ரோஹண விஜேவீரவின் குடும்ப அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(v) திரு. ரோஹண விஜேவீர அவர்களின் குடும்ப அங்கத்தவர்களை பராமரிப்பதற்காக இதுரையில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள மொத்த செலவு மதிப்பீட்டடிப்டையில் எவ்வளவு என்பதையும்;

(vi) தற்போது அரசாங்கத்தின் பாதுகாப்பைப் பெறுகின்ற அக்குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பிற்காக அரசாங்கத்தால் மாதாந்தம் செலவு செய்யப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?